**செய்தி வெளியீடு எண்-838** **நாள்- 13.11.2009**

செய்தி வெளியீடு

**உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை 1 கோடியே 62 ஆயிரம் குடும்பத்தினர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்**

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் கடந்த செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் உறுப்பினர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கப்பட்டு, இன்று (13.11.2009) வரை, அதாவது 75 நாட்களுக்குள் 1 கோடியே 62 ஆயிரம் குடும்பங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் இதுவரை 37 இலட்சத்து 64 ஆயிரம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் (Smart Cards) வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இன்றுவரை 37 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிலான மருத்துவ / அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 11 ஆயிரத்து 310 நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு, அவர்களில் 10 ஆயிரத்து 148 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர்.

தமிழகத்தில் 458 தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ், இருதய நோய் சிகிச்சைக்காக 1925 நபர்களும், எலும்பு முறிவு சிகிச்சைக்காக 2044 நபர்களும், சிறுநீரகவியல் சிகிச்சைக்காக 1042 நபர்களும், நரம்பியல் சிகிச்சைக்காக 966 நபர்களும், புற்றுநோய் சிகிச்சைக்காக 1054 நபர்களும் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எம். ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

***************

**வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.**